செ.வெ.எண் : 29/ஜூன் நாள்:14.06.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**நீர்நிலைகளை ஆழப்படுத்தி, வண்டல் / கனிம படிமங்களை வேளாண்மைப் பணிகளுக்கு உபயோகித்திடும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்நிலைகள் தூர்வாறும் பணிகளின் மூலம் மாவட்டத்தில் 821 நீர்நிலைகளில் மொத்தம் 8.12 இலட்சம் கியூபிக் மீட்டர் அளவில் வண்டல் படிமம் எடுக்கப்பட்டுள்ளன.**

**மக்கள் தொடர்புத் திட்ட முகாமில்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், தாளையடிக்கோட்டை கிராமத்தில் இன்று (14.06.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமில் தமிழ்நாடு அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களின் கீழ் 160 பயனாளிகளுக்கு ரூ.48.82 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது :**

அரசுத்துறை அலுவலர்கள் கிராமங்களுக்கு நேரடியாக சென்று, கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு காணும் விதமாக மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாமில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அந்தந்த துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் விளக்கி கூறப்படுகிறது.

இன்று நடைபெறும் இம்முகாமில் தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் 160 பயனாளிகளுக்கு ரூ.48,82,001/- மதிப்பிலான நலத்திட்டம் மற்றும் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தாளையடிக்கோட்டை கிராமப்பகுதியில் குடிநீருக்காக உறைகிணறு அமைத்திட ரூ.50,000/- மதிப்பிலும், நியாயவிலைக் கடையினை பழுது நீக்கம் செய்திட ரூ.95,000/- மதிப்பிலும், பாப்பார்கூட்டம், சாலியர்வாகனபுரம் ஆகிய கிராமப்பகுதிகளில் புதிய கைப்பம்பு அமைத்திட தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.2 இலட்சம் மதிப்பிலும், மேமங்களம் கிராமப்பகுதியில் புதிய சின்டெக்ஸ் பிளாட்பாரம் அமைத்திட ரூ.45 ஆயிரம் மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ.3.90 இலட்சம் மதிப்பில் 5 புதிய பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளன. விரைவில் அனைத்து பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும் தமிழ்நாடு அரசு தற்போதுள்ள வறட்சியான சூழ்நிலையில் கண்மாய்கள் மற்றும் ஊரணிகள் உள்ளிட்ட நீர்நிலைகளை ஆழப்படுத்தி அதன் கொள்ளளவினை உயர்த்திடும் வகையிலும், நீர்நிலைகளில் உள்ள கனிமம் நிறைந்த வண்டல் படிமங்களை விலையில்லாமல் எடுத்து வேளாண்மைப் பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ள விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாகவும் அரசாணை வெளியிட்டுள்ளது. இதன்படி மாவட்டத்தில் உள்ள 4,556 கண்மாய்கள் மற்றும் ஊரணிகளுள், 821 நீர்நிலைகளில் ஆழப்படுத்தி கொள்ளளவினை உயர்த்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக இதுவரை 9,247 விவசாயிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு இதுவரை 8.12 இலட்சம் கியூபிக் மீட்டர் அளவில் வண்டல் மண் எடுக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இதுமட்டுமல்லாது வேளாண்மைத் துறையின் மூலம் ஒருங்கினைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி, நயினார்கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.1.5 கோடி மதிப்பில் ஊரணிகள் கண்மாய் தூர்வாறுதல், நீர்செறிவூட்டுதல் உள்ளிட்ட பல்றேு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதவிர, மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 5,131 பண்ணைக்குட்டைகள் அமைத்திட திட்டமிடப்பட்டு 4,331 பண்ணைக்குட்டைகள் வெட்டும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 800 பண்ணைக்குட்டைகள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தற்போது வரை 377 பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே பண்ணைக்குட்டை அமைத்து விவசாயத்தினை மேம்படுத்திட விரும்புவோர் உடனடியாக வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தினை அணுகி இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இம்முகாமில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.தி.மோகன், சமூகபாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணின், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.குணசேகரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.தங்கவேல், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.வ.முருகானந்தம், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.ஜெயராமன், மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் திருமதி.ப.மாரியம்மாள் உள்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**